செ.வெ.எண்: 37 நாள்: 29.06.2020

# பத்திரிக்கைச் செய்தி

2019-20-ஆம் ஆண்டிற்கான தேசிய கால்நடை குழுமம் (National Livestock Mission - NLM) ஊரக புறக்கடை செம்மறியாடுகள் / வெள்ளாடுகள் மேம்பாட்டுத் திட்டமானது, அரியலூர் மாவட்டத்தில் அரியலூர், திருமானூர், ஜெயங்கொண்டம், தா.பழூர் மற்றும் செந்துறை ஆகிய ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஒரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 45 பயனாளிகள் வீதம் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து 225 பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

தேர்வு செய்யப்படும் ஒவ்வொரு பயனாளிக்கும் 5-6 மாத வயதுடைய ஒரு கிடா ஆடு மற்றும் 4-5 மாத வயதுடைய 10 பெண் ஆடுகள் கொள்முதல் செய்து வழங்கப்படும். ஒரு பயனாளிக்கான மொத்த செலவினத்தொகை ரூ.66,000/-ல், பயனாளி தனது பங்குத்தொகையாக ரூ.6,600/- (10% தொகை) செலுத்த வேண்டும். இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் ஆடு வளர்ப்பில் ஆர்வமுள்ள நிலமற்ற ஏழைகள், சிறு/குறு விவசாயிகள் அவர்களது பகுதிக்கு அருகாமையில் உள்ள அரசு கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரை அணுகி விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை **10.07.2020**-க்குள் கால்நடை உதவி மருத்துவரிடம் அளிக்க வேண்டும்.

இத்திட்டத்தில் தேர்வு செய்யப்படும் பயனாளிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளோர், பெண் விவசாயிகளில் விதவை (ம) ஆதரவற்ற விதவை, சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தேர்வு செய்யப்பட உள்ள மொத்த பயனாளிகள் எண்ணிக்கையில் 30 சதவீதத்திற்கு குறையாமல் ஆ.தி. / ப.வ. பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.

ஆடு வளர்ப்பிற்கு தகுதியான ஒருங்கிணைப்புக் குழு கிராமங்களிலிருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.

தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு வெள்ளாடு வகைகளில் கன்னி ஆடு, கொடி ஆடு, சேலம் கருப்பு ஆடு மற்றும் செம்மறியாடு வகைகளில் கோயம்புத்தூர், கீழகரிசல், சென்னை சிவப்பு, மேச்சேரி, நீலகிரி, ராமநாதபுரம் வெள்ளை, திருச்சி கருப்பு, வேம்பூர், கச்சைக்கட்டி கருப்பு, செவ்வாடு வகைகளில் ஆடுகள் கொள்முதல் செய்து வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**